1295

# வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை– 2017

| தரம் - 08 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :- ................................

### பகுதி – I

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) நெற்றியில் குட்டிக் கும்பிடும் வழிபாட்டிற்குரியவர்.
1. சிவன் 2. சக்தி 3. விநாயகர் 4. விஷ்ணு

02) பிறந்தநாள் கொண்டாடப்படும் தினம்.
1. பிறந்ததிகதி 2. பிறந்த மாதம் 3. பிறந்த கிழமை 4. பிறந்தநட்சத்திரம்

03) மேடராசியில் சூரியன் புகும்போது கொண்டாடப்படும் பண்டிகை.
1. சித்திரைவருடப் பிறப்பு 2. தீபாவளி 3. ஆடிப்பிறப்பு 4. தைப்பொங்கல்

04) கண்ணப்ப நாயனாரின் தந்தை.
1. நாணன் 2. திண்ணனார் 3. நாகன் 4. காடன்

05) சிவன் பார்வதி திருமண நாள்.
1. ஆனிஉத்தரம் 2. பங்குனிஉத்தரம் 3. வைகாசிவிசாகம் 4. ஆடிப்பூரம்

06) பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கும் சிவவடிவம்.
1. சிவலிங்கம் 2. தட்சணாமூர்த்தி 3. இலிங்கோற்பவர் 4. நடராசர்

07) சுந்தரமூர்த்தி நாயனாருக்கு நெல் வழங்கியவர்.
1. சேக்கிழார் 2. குண்டையூர்க்கிழார்
3. ஏயர்கோன்கலிக்காமவர் 4. மாறனார்

08) "பெருகலாம் தவம்......." என்ற தேவாரத்தினைப் பாடியவர்.
1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரர்
3. திருநாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

09) ஆலயத்தில் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்திகொண்டவை.
1. விமானங்கள் 2. கோபுரங்கள் 3. கொடிமரம் 4. கலசங்கள்

10) அடியார்களின் சிவபக்திச் செயல்கள் இறைவனது திருவருட்சிறப்பு என்பவற்றைக் கதைவடிவில் கூறும் நூல்.
1. வேதம் 2. ஆகமம் 3. திருமுறைகள் 4. புராணங்கள்

11) "காலகாலன்" என அழைக்கப்படுபவர்.
1. சிவன் 2. மார்க்கண்டேயர் 3. பிரமா 4. விஷ்ணு

12) மிருக பலியை எதிர்த்த சீர்திருத்தவாதி
1. விவேகானந்தர் 2. சிவபாதசுந்தனார் 3. சி.கணபதிப்பிள்ளை 4. இராசரத்தினம்



kalvi.lk

13) மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட தலம்.
1. திருவாரூர் 2. திருவாமூர் 3. திருவாதவூர் 4. திருப்பெருந்துறை

14) திருமருகல் இறைவி பெயர்.
1. வண்டுவார்குழலி 2. மீனாட்சியம்மை 3. விசாலட்சியம்மை 4. உண்ணாமுலையம்மை

15) திருமறைக் காட்டில் கதவு திறக்கப் பாடிய தேவாரம்
1. "பெருகலாந்தவம்..........." 2. "பண்ணினேர் மொழியாள்...."
3. "மண்ணினல்லவண்ணம்..." 4. "மாசில் வீணையும்........"

16) அவன் வடிவெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்யேயாம்.." எனக்கூறியவர்.
1. தியாகேசர் 2. வன்மீகநாதர் 3. தோணியப்பர் 4. காளத்தியப்பர்

17) "தேவாசிரியன்" மண்டபம் உள்ள இடம்.
1. திருமறைக்காடு 2. திருவாமூர் 3. திருவாரூர் 4. தோணிபுரம்

18) "ஆலந்தானுகந்து அமுது செய்தானை" இதில்கூறப்படும் புராணக்கதை.
1. நஞ்சுண்டமை 2. கரியுரிபோர்த்தமை 3. பிறைசூடியமை 4. கங்கையைச்சூடியமை

19) ஆலயக் கிரியைகளில் முதலில் இடம்பெறுவது.
1. வீதியுலா 2. அபிடேகம் 3. நைவேத்தியம் 4. வேறாமம்

20) சைவசமயி ஒவ்வொருவரதும் குறிக்கோள்.
1. உயர்ந்த உத்தியோகம் பார்ப்பது.
2. அதிகபணம் சம்பாதிப்பது.
3. இறைவனை அடைவது.
4. வீடு சொத்து சுகம் பெறுவது.

[20x2=40 புள்ளிகள்]



kalvi.lk

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர் பெயர், தலம் என்பவற்றையும் தருக.
   1. "பெருகாலந்தவம் ..............."
   2. "பண்ணினேர் மொழியாள்.........."
   3. "நீளநினைந்தடியேன்.........."
   4. "தில்லை வாழந்தணர்........"

   [6+1+1x2=16 புள்ளிகள் ]

2. "பண்டிகைகள் தனிமனிதனுக்கும் சமுததாயத்திற்கும் நன்மைகளைத் தருகின்றன"
   1. பண்டிகை என்றால் என்ன?
   2. நாம் கொண்டாடும் பண்டிகைகள் எவை?
   3. மருத்துநீர் தயாரிக்கப்படும் பொருட்களைத் தருக.
   4. பண்டிகை கொண்டாடுவதன் மூலம் நாம் அடையும் நன்மைகள் யாவை?

   [2+3+3+3=11 புள்ளிகள் ]

3. "இறையருளைப் பெறும் சாதனங்களில் விரதமும் ஒன்று."
   1. "விரதம்" என்பதன் வரைவிலக்கணத்தை தருக.
   2. விரதம் அனுட்டிப்பதால் பெறும் பயன்கள் 3 தருக.
   3. பங்குனி உத்தரத்தின் தத்துவம் யாது?
   4. வைகாசி விசாகத்தின் சிறப்பை எழுதுக.

   [2+3+3+3=11 புள்ளிகள் ]

4. "ஆலயந்தொழுவது சாலவும் நன்று".
   1. நாமும் நமது சூழலும் சுத்தமாக விளங்குவதற்குரிய ஆலய வழிபாட்டுச் செயல்கள் எவை?
   2. ஆலயத்தில் செய்யத்தகாதவைகள் யாவை?
   3. ஆலயத்தில் இறைவனை வழிபடும் போது இருகரங்களையும் ஒன்றுசேரத்து வணங்குவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
   4. ஆலயத்தில் தலவிருட்சங்களாக விளங்குபவை எவை? அவற்றை வலம் வருவதன் பயன்கள் யாவை?

   [2+3+3+3=11 புள்ளிகள் ]

5. "திருமுறைகள் பன்னிரண்டாகும்..."
   1. திருமுறைகள் என்றால் என்ன?
   2. இராவணன் சாமகானம் பாடியதன் காரணம் யாது?
   3. இதிகாசங்கள் எவற்றைக் கூறுகின்றன?
   4. திருமுறைகள் பாடல்களில் கூறப்படும் புராணக்கதைகள் மூன்று தருக. அவை இடம் பெறும் தேவாரத்தையும் குறிப்பிடுக.

   [2+3+3+3=11 புள்ளிகள் ]

6. "சமயகுரவர்கள் இறையருளால் அற்புதங்கள் செய்தனர்."
   1. திருஞானசம்பந்தரின் அற்புதங்கள் இரண்டை எழுதுக.
   2. உழவாரப்படையாளியை இறைவன் எவ்வாறு ஆட்கொண்டார்? அப்போது பாடிய தேவாரம் யாது?
   3. சிவனடியார் அனைவருக்கும் தாம் அடிமை எனப்பாடியவர் யார்? பாடல் அடி எது? பாடப்பட்ட தலம் யாது?
   4. சமயகுரவர் வரலாற்றை அறிந்ததால் நீர் செய்யவேண்டிய செயற்பாடுகள் மூன்று தருக.

   [2+3+3+3=11 புள்ளிகள் ]

7. "கண்ணப்பர் தீவிர பக்தியாளர்"
   1. திண்ணனார் கண்ட மலை எது? அங்குள்ள இறைவன் பெயர் யாது?
   2. திண்ணனார் செய்த பூசையை விளக்குக.
   3. திண்ணனார் எச்செயல்மூலம் கண்ணப்பரானார்? இதில் எகூறப்பட்ட பழமொழி யாது?
   4. காளத்தியப்பர் கண்ணப்பருக்கு எவ்வாறு அருள் செய்தார்?

   [2+3+3+3=11 புள்ளிகள் ]



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page